**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.50/2023** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 3** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| **Name :** | முத்துசாமி | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **25.07.2025**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூரில் வள்ளலார் தெருவில் குடியிருக்கிறேன். விவசாய தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1 வது எதிரி பெயர் மலர்கொடி, 2 வது எதிரி பெயர் வெங்கடேசன். இறந்த ராமகிருஷ்ணன் என் அக்கா மகன். அ.சா.2 என் அக்கா ஆவார். 1வது எதிரிக்கும், அவர் கணவருக்கும் இடையே சின்ன சின்ன சண்டை நடக்கும். அவர்களுக்குள் நடக்கும் என்பதால் நான் கண்டுகொள்ளவில்லை. 25ம் தேதி இரவில் சண்டை நடந்ததற்கான Reason என்ன என்று தெரிவற்காக அக்கா வீட்டுக்கு போனேன். நானும், அக்காவும் வீட்டிற்கு முன்னால் நின்று பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது வீட்டின் பின்பக்கம் சத்தம் கேட்டது. கதவை திறந்து பார்க்கும் போது 1ம் எதிரி இரும்பு பைப்பால் அவர் கணவரை அடித்து கொண்டு இருந்தார். ஏம்மாஅடிக்கிற, உயிர் போய்விட போகிறது என்று நான் சொன்னேன். அவர் எதுவும் சொல்லாமல் பைப்பை போட்டு விட் போய்விட்டார். ராமகிருஷ்ணனை ஆஸ்பத்திரிக்கு அழைத்தேன். நான் வரவில்லை, காலையில் போகலாம் என்று

சொன்னார். மறுநாள் காலையில் செல்வகுமார் என்னிடம் ராமகிருஷ்ணன் தவறிவிட்டதாக தகவல் சொன்னார். அதன்பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க போனோம். செல்வகுமார் புகார் கொடுத்தார். பின்னர் போலிசார் வந்தார்கள். என்னை அங்கேயே போலிசார் விசாரித்தார்கள். பின்னர் ராமகிருஷ்ணன் உடலை போஸ்ட்மாடம் செய்தார்கள். போலிசாரிடம் நடந்த விவரத்தை சொன்னார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ராமகிருஷ்ணனுக்கு குடிப்பழக்கம் உண்டு. அவ்வாறு குடித்துவிட்டு எரிகளுடன் சண்டை போடுவாரா என்றால் அது அவருடைய குடும்ப விசயம் நான் கண்டு கொள்வது கிடையாது. 2019ம் ஆண்டில் 2வது எதிரியை ராமகிருஷ்ணன் கத்தியால் குத்தபோனது சம்மந்தமாக 2வது எதிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. 2019ம் ஆண்டில் 2வது எதிரி பூலாம்பாடியில் உள்ள அவர் பாட்டி வீட்டில் தங்கி கொண்டு வேப்பந்தட்டையில் படித்தார் என்றால் வேப்பந்தட்டையில் படித்த விவரம் தெரியும். பாட்டி வீட்டில் தங்கி இருந்தாரா என்று எனக்கு தெரியாது. 2019 முதல் 2021 வரை கோபி பேக்கரியில் வேலை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் கேள்விபட்டுள்ளேன். 2வது எதிரி அவர் பெற்றோர் சம்மதம் இன்றி 2023ம் ஆண்டில் கலப்பு திருமணம் செய்த விவரம் எனக்கு தெரியாது. கலப்பு திருமணம் செய்த பின்னர் அவர் பாட்டி வீட்டில் தங்கி இருந்தாரா என்று எனக்கு தெரியாது. 2வது எதிரி என்னிடம் 2019 முதல் பேசுவது கிடையாது, பார்த்தது கிடையாது என்றால் சரிதான். 1ம் எதிரியை பார்ப்பது கிடையாது, பேசுவது கிடையாது. 25.03.2023ம் தேதி 2வது எதிரியின் காலில் ஏற்பட்ட காயத்திற்கு 2வது எதிரியும், 1வது எதிரியும் மருத்துவமனையில் சேர்ந்த விவரம் தெரியுமா என்றால் மறுநாள் சொன்னார்கள். மருத்துவமனையில் இருந்த எதிரிகளை நான் பார்க்கவில்லை. எனக்கு குடும்ப பிரச்சனை சம்மந்தமாக மற்றும் ஆஸ்பத்திரியில் சேர்ந்தது சம்மந்தமாக யார் தகவல் சொன்னார்கள் என்றால் குடும்ப பிரச்சனை சம்மந்தமாக என் அக்கா சொன்னார்.

ஆஸ்பத்திரிக்கு சேர்ந்தது சம்மந்தமாக மறுநாள் காலையில் அங்கு இருந்தவர்கள் சொன்னாக்ள். மறுநாள் அண்ணன் இறந்துவிட்டதாக காலை 06.00 மணியளவில் செல்வகுமார் தகவல் சொன்னார். தகவல் சொன்ன பின்னர் என்அக்கா வீட்டிற்கு நான் வந்தேன் என்றால் காலையில் வந்தேன். சாட்சி தானாக முதல் நாள் வந்ததாகவும் கூறுகிறார். நான் இரவு சுமார் 10, 10.15 மணியளவில் என்அக்கா வீட்டிற்கு வந்தேன். அப்போது செல்வகுமார் வீட்டில் இல்லை. உண்மையில் நான் சொல்வது போன்று முதல்நாள் கம்பியால் ராமகிருஷ்ணனை எதிரிகள் அடித்திருந்தால் நான் எதிரிகளை பிடித்து காவல்நிலையத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று இரவில் என்அக்கா வீட்டிற்கு வரவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் சேர்ந்த பின்னர் இரவில் வீட்டிற்கு வரமுடியாது என்றால் சரியல்ல. நான் இரவில் வீட்டிற்கு வந்தது யாருக்கு தெரியும் என்று சொன்னால் என்அக்காவிற்கு தெரியும். நான் இரவில் வந்ததாக என்அக்கா சாட்சியம் சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மறுநாள் காலையில் 06.00 மணிக்கு நான் வீட்டிற்கு வந்து ராமகிருஷ்ணன் இறந்திருந்தை பார்த்தேன். என்அக்காவீட்டிற்கு பின்புறம் சமையலறை அருகில் இறந்துகிடந்தார். நான் இரவில் வந்தபோது ராமகிருஷ்ணன் கட்டம்போட்ட கைலி கட்டிஇருந்தார். கோடு போட்ட சட்டை போட்டு இருந்தார். காலையில் இறந்துகிடந்த போது இரவில் கட்டியிருந்த அதே கைலியை கட்டியிருந்தார். சட்டை போடவில்லை. பனியன் போட்டு இருந்தார். பனியன் மற்றும் கைலியில் ரத்தக்கறை இருந்தது. அவர் என்ன கலர் கைலி கட்டியிருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. நான்கூறுவது போன்று கட்டம் போட்ட கைலி கட்டியிருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போன்று என்அக்கா வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் வந்திருந்தால் என்ன உடை உடுத்தியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், வராததால் தான் உடை பற்றிய விவரம் எனக்கு தெரியவில்லை

என்றால் சரியல்ல. போலிசார் என்னை காலையில் 07.30, 08.00 மணியளவில் விசாரித்தார்கள். செந்தாமரைகண்ணன் SI விசாரித்தார். மேலாதிகாரி விசாரித்தாரா என்றால் கேட்டார்கள் அவர் யார் என்று தெரியவில்லை. 6, 7 பேர்கள் இருந்தார்கள். புகாரை வழக்கறிஞர் அல்லது போலிசார் சொல்லி எழுதப்பட்டதா என்றால் அவர்கள் சொல்லவில்லை செல்வகுமார் அவராக எழுதினார். புகார் கொடுக்கும் போது நான், செல்வகுமார் மற்றொரு பையன் மருதமுத்து இருந்தோம். எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், அசா.1, 2 க்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.